# நாடுதிரும்பும் அகதிகள் பாதுகாப்புபற்றி அரசு உறுதி தரவில்லை!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 14 இதழ் 358
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28-1-1995

(கொழும்பு)
பல்வேறு நாடுகளிலிருந்தும் நாடு திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளின் பாதுகாப்பு பற்றி இலங்கை அரசு எந்தவிதமான உறுதிமொழிகளையும் தரவில்லை என்று அகதிகளுக்கான பிரிட்டிஷ் நிறுவனம் கூறியிருக்கின்றது. இலங்கையில் நடக்கும் சமாதானப் பேச்சுக்களின்

(4ம் பக்கம் பார்க்க]

வடக்கு கிழக்கில்

## தொகுதி தோறும் 100 வீடுகள் அமைக்க முடிவு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பகுதிகள் உட்பட நாட்டின் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் 100 வீடுகள் நிர்மாணிக்கப் படும் எனவீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.
அடுத்த மாதத்திலிருந்து இத்திட்டம் அமுல் செய்யப் படும் வடக்கு கிழக்கில் 15 மாவட்டங்கள் இதற்கென ஏற்கனவே தெரிவு செய்யப் பட்டு விட்டன.

(4ம் பக்கம் பார்க்க

# அரசியல் தீர்வு எட்டாதுவிடின் பேச்சு தொடர்வதில் பயனில்லை!

## சந்திரிகா தெரிவிப்பு

[கொழும்பு]
இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொள்வது அவசியமாகும். எனினும் பேச்சுவார்த்தையின்போது அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முடிவு காணப்படாவிடின் அந்தப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து மேற்கொள்வதில் பயன் ஏதுமில்லை.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பிரெஞ்சு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒனறில் இவ்வாறு தெரிவித்துள்ளதாக சிங்கள வெரித்தாஸ் சேவை குறிப்பிட்டது.
சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் அதே வேளையில வடக்கில் புனருத்தாரன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அரசு முடிவுசெய்துள்ளது.
பொருளாதாரத்தடை நீக்கம், வடக்கில் படை முகாம்களை நீக்குவது போன்றவை அரசியல் பேச்சுவார்த்தையை

(4-ம் பக்கம் பார்க்க)

## 5ம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)
ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் வழங்கும் மாணவர் எண்ணிக்கையை அடுத்த வருடம் முதல் அதிகரிப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்,
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: தற்பொழுது புலமைப் பரிசில் பெறும் மாணவர் எண்ணிக்கை ஏழாயிரத்து ஐந்நூறு அடுத்த வருடம் முதல் இவ் எண்ணிக்கை பத்தாயிரமாக அதிகரிக்கப்படும்.
புலமைப் பரிசிலுக்காக வழங்கப்படும் வெகுமதித் தொகையையும் அதிகரிப்பதென உத்தேசிக்கப்பட்டுள்

(4ம் பக்கம் பார்க்க)

## வினாத்தாள்களை இலகுவாக்க முடிவு

[கொழும்பு[
ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இந்தவருடம் முதல் மாற்றம் செய்யப் படவுள்ளது.
வினாத்தாள்கள் அமைக்கும் முறை திருத்தியமைக்கப்பட்டு இலகுவான வினாத்தாள்கள் இவ்வருடம் முதல் இப்பரீட்சைக்கு அமைக்கப்படும்.
கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன இத்தகவல்களைத் தெரிவித்தார்.
ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் மிகவும் கடுமையாகவே இருக்கின்றன. இதனால் மிகவும் இளவயது மாணவர்கள் உளரீதியாக மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இளவயதுள்ள மாணவர்களுக்கு இப்படியான ஒரு கடுமையான பரீட்சை தேவைதானா? என்று பல தரப்பினரும் கடந்தசில காலமாக அரசுக்கு புகார் செய்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பாதுகாப்பை மறுசீரமைக்க அரசு முடிவு

(கொழும்பு)
ஜனாதிபதியின உத்தியோக பூர்வ வாசஸ் தலமான அலரி மாளிகையில் அண்மையில் வெடிப்பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் பாதுகாப்பை மறுசீரமைக்க அரசு முடிவு செய்துள்ளது.
இது சம்பந்தமான விரிவான அறிக்கை ஒன்று பாதுகாப்புத் துறை நிபுணர்களால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
கொழும்பு கொள்ளுப்பிட்டி

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலை ராணுவ அணிகள் மாற்றம்

(கொழும்பு)
திருகோணமலையில் கடந்த நான்கு ஆண்டுகளாக இருந்து வந்த இராணுவ அணிகள் அனைத்தும் மாற்றப்பட்டு வருகின்றன.
தம்பலகாமம் கோவில் குடியிருப்பில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் இடமாற்றம் செய்யப்பட்டு, தற்போது கப்டன் திலகரட்ன தலைமையிலான புதிய இராணுவ அணியொன்று முகாமிட்டுள்ளது.
இதேபோன்று, மூதூர்ப் பகுதியில் உள்ள வீண்கொட முகாமில், கப்டன் கே. எஸ். தர்மசேன தலைமையிலான புதிய இராணுவ அணியொன்று முகாமிட்டுள்ளது.
வி-இ

தாண்டிக்குளத்தில்

## 25 லட்ச ரூபா செலவில் பாஸ்வழங்கும் அலுவலகம்

(கொரும்பு)
வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் பாஸ் வழங்கும் அலுவலகம் ஒன்று பெரிய அளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கென பாதுகாப்பு அமைச்சினால் 25 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவிருப்பதாக அறியவந்துள்ளது.
வவுனியா ஊடாக பயணம் செய்யும் பயணிகளின் நன்மை கருதியே இந்தப்புது அலுவலகம் அமைக்கப்படுகிறது.
க-இ

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று சனிக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

உயர்கல்வி பெருத மாணவர்க்கு

## திறந்த பாடசாலை அமைக்க ஆலோசனை

(கொழும்பு)
உயர் கல்வியை பெருத மாணவர்களுக்கு திறந்த பாடசாலை ஒன்று நிறுவப்படவுள்ளதாக தேசிய கல்வி நிறுவன பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரேமதாச உடகம தெரிவித்துள்ளார்.
தேசிய கல்வி நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படவிருக்கும் மேற்படி பாடசாலையில் எழுத வாசிக்க தெரிந்த அனைவரும் சேர்த்துக்கொள்ளப்படுவர். தொலைக்கல்வி; மற்றும் வானொலி போன்ற வெகுஜன

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு.பொலிஸ் நிலையங்களில் பாதுகாப்பு அரண் அமைப்பு

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் சுற்றி பாதுகாப்பு அரண்கள் அமைப்பதில் பொலிசார் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.
வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகள் அனைத்திலும் பொலிசார் மண் அரண் அமைக்கும் வேலையில் தற்போது ஈடுபட்டு வருவதாகவும் இவ்வேலைகளில் 200 க்கும் மேற்பட்ட பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் புல்டோசர்களும்

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

**Maths English 95**

ஆண்டு 6 இருந்து O/L வரை ஆரம்பத்திலிருந்து விசேடமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85 சிவன் கோவிலடி, மணல்தறை லேன், திருநெல்வேலி. (சி-1385)


### சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

லண்டன் நாழிகை சஞ்சிகையின் ஆசிரியர் திரு. மாகலிங்கசிவம் (மாலி) யுடனான கலந்துரையாடல் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை தலைமையில் நாளை ஞாயிறு மாலை 3 மணிக்கு தமிழ் எழுந்தாளர் ஒன்றிய மண்டபத்தில் ]ஆரியகுளம் யாழ்ப்பாணம்) நிகழ்வுள்ளது.

### வெங்காயம் விலை வீழ்ச்சி

(அரியாலை)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராமங்களில் வெங்காய அறுவடை ஆரம்பித்துள்ளதால் சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. 1 கிலோ சின்ன வெங்காயம் 20 ருபாவிலிருந்து 25 ரூபா வரை தற்பொழுது விறகப்பட்டு வருகின்றது. -59

### கற்பித்தல் பயிற்சி

(வட்டுக்கோட்டை)

தேசிய கல்வி நிறுவக யாழ். பிராந்திய நிலையத்தினர் தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியினை மேற்கொண்டு வருவோருக்கு கற்பித்தற்பயிற்சியைநடாத்தி வருகிறது.

இப்பயிற்சி வகுப்புக்கள் தொடர்ந்து நான்கு வாரங்களுக்கு நடாத்தப்படுமென சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ரி. கமலநாதன் அறிவித்துள்ளார். -139

### ஐயாயிரம் அகதிகள் திரும்புவர்

(சென்னை)

தமிழகத்திலிருந்து ஐயாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் அடுத்தமாதம் திருப்பி அனுப்பப்படவுள்ளதாக தமிழ்நாடு அகதிகள் மறுவாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து மேலும் பல அகதிகள் கட்டம் கட்டமாக திருப்பி அனுப்பப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். -க

### கிணற்றில் வீழ்ந்து மரணம்

(உடுவில்)

கிணற்றில் நீர் அள்ளச் சென்ற பெண்ணொருவர் வலிப்பு நோய்காரணமாக கிணற்றுள் வீழ்ந்து மரணமான பரிதாபகர நிகழ்வு நவாலியில் நடைபெற்றுள்ளது. நவாலியை சேர்ந்த பொன்மலர் (வயது 43 என்ற பெண்ணே இவ்வாறு மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது, -109

### விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(கொழும்பு)

பொது எழுதுவினைஞர் தட்டெழுத்தாளர்சுருக்கெழுத்தாளர் ஆகியவர்களை தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்தமாதம் 28ம் திகதிவரை பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பகிறது.

ஏற்கனவே இப்பரீட்சைக்கு இலங்கை பூராகவும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்துள்ளனர். ம-சி

கம்பஹா

## ஆயுள்வேதகல்லூரி பல்கலையுடன் இணைந்தது

(கொழும்பு)

கம்பஹா ஆயுள் வேதக் கல்லூரி களனிப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இங்கு கல்விகற்கும் மாணவர்கள் பல கோரிக்கைகள் விடுத்தும் பல போராட்டங்கள் நிகழ்த்தியும், இப்போதுதான் அரசாங்கம் களனிப்பல்கலைக் கழகத்துடன் இதனை இணைத்துள்ளது.

இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பலர் அரசாங்கத்தின் இந்த முயற்சியை வரவேற்றுள்ளனர், -ம

## ஜப்பானில் அதிகரிக்கும் தற்கொலை மரணங்கள்

(டோக்கியோ)

மத்திய ஜப்பானின் கோபே நகரில் அண்மையில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியை அடுத்து, அப்பகுதியில் தற்கொலை மரணங்கள் வெகுவாக அதிகரித்துள்ளனவாம்.

தமது கைகளில் உள்ள நரம்புகளைக் கத்தியால் வெட்டுவதிலும் சிலர் ஈடுபட்டு வருகின்றனராம்.

பூமி அதிர்ச்சியில் தமது உடன் பிறப்புக்கள் மற்றும் உறவினர்களை இழந்தமை, பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்கப் போதிய வசதியின்மை, விரக்தி நிலைமை போன்றவற்றினாலேயே தற்கொலை மரணங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. க-சி

## மலையக பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுகுறை

(கொழும்பு)

சப்பிரகமுவா மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் 470 தமிழ் ஆசிரியர்கள் பற்றுக்குறையாக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மலையகத்தின் பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றுக்குறை நிலவுவதாக, அங்குள்ள பிரமுகர்கள் அரசாங்கத்துக்குப் பலமுறை கோரிக்கைகள் விடுத்தும், அரசாங்கம் கண்டும் காணாததுபோல் இருந்து வருகின்றது என்று பலர் குறைப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, வடக்கு-கிழக்குப்பாடசாலைகளில் தொடர்ந்தும் ஆசிரியர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

## உவர்நீர் கிணறுகள் நன்னீராக மாற்றப்படுகிறது

(சுன்னாகம்)

கந்தரோடைப் பகுதியில் உவர் நீர் காணப்படும் கிணறுகளை நன்னீர்க் கிணறுகளாக ஆக்கும் முயற்சிகள் வெற்றியளித்திருப்பதாக இப்பரிசோதனையில் ஈடுபட்டுவரும் நீர்வளப் பொறியியலாளர் எஸ். இரத்தினம் தெரிவித்துள்ளார்.

இவர் இதற்கான செயற்பாடுகளில் இறங்கி, தமது ஆய்வுக்காக இப்பகுதியில் உள்ள 30 கிணறுகளைத் தேர்ந்தெடுத்திருப்பதாகவும், அதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டமையால் மூன்று கிணறுகள் பூரணமாக நன்னீராக மாறியுள்ளன என்றும் அறுபது வீதமான கிணறுகளில் உவர்த் தன்மை பெரிதும் குறைந்திருப்பதையும் நிரூபித்துள்ளார்.

ஏனைய கிணறுகளையும் இவ்வாறு மாற்றும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 162-சி

" இனப்பிரச்னைக்கு

## இறுதியான, உறுதியான தீர்வு காணப்பட வேண்டும்

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு இறுதியானதும் உறுதியானதுமான தீர்வு காணப்படவேண்டும். இதற்கான எந்து பங்களிப்பு மனிதாபிமான அடிப்படையிலேயே அமையும் என்று வடக்கு - கிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழர் எதிர்நோக்கும் பிரச்னைகள், அவர்களின் அபிலாஷைகள், அவர்கள் அனுபவித்துவரும் வேதனைகள், அவர்கள் புரிந்துவரும் போராட்டங்கள், நிகழ்த்திய சாதனைகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும்.

நாட்டில் புரையோடியிருக்கும் இந்த இனப்பிரச்னைக்கு தீர்வு கண்டுவிட வேண்டும் என்ற நோக்குடன் ஜனாதிபதி துணிந்து செயல்படுகின்றார். இதற்கு முன் யாரும் செய்யத் துணியாத முறையில் அவர் சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அவருக்குள்ள திட நம்பிக்கை வெற்றியளிக்கும் என்று நம்புகிறேன் என்றார். -ம

### வீர வணக்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி வட்ட ஜனவரி மாத மாவீரர் வீரவணக்கக் கூட்டம் ஏற்கனவே அறிவித்தது போன்று இன்று 28ம் திகதி சனியன்று நடைபெற மாட்டாது என்றும் இக் கூட்டம் 30ம் திகதி திங்களன்று இரவு 7-30 மணிக்கு சமரபாகு மாவீரர் படிப்பகத்தில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி மேம்பாட்டு பேரவை

## பரிசில்கள் பெறும் மாணவர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தமிழீழ முதனிலைத் தேர்வு தமிழீழ இளநிலைத்தேர்வு, தமிழீழ பொதுக் கல்வித் தேர்விலை தேசிய மட்டத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்று பரிசு பெறவுள்ள மாணவர் விபரம் வருமாறு:

### தமிழீழ முதநிலைத் தேர்வு – 4994

**தமிழ்**

01 பிரவீநா பொன்னம்பலம் [பொஸ்கோ வி.] - 99 புள்ளி 01 ஆன்ஜெனிற்ரு அருளினி அருட்சோதி [யா/தந்தை செல்வா] - 99 புள்ளிகள். 01 கோபால கிருஷ்ணன் சுதர்சன் [யா/இந்துஆரம்ப]-99புள்ளிகள், 01 விமலேஸ்வரி ஆதித்தன் [யா/ இந்து ஆரம்ப] - 99 புள்ளிகள்.

**கணிதம்**

01. இராஜேந்திரன் குருபரன் [யா/திருநெல்வேலி இ. த. க பா-99, 02. விதுசியா துரைசிங்கம் [யா/ இத்து மகளிர் ஆரம்ப பா - 96, 02. நவரத்தினராசா அச்சுதன் [கரவெட்டி மாணிக்கவாசகர் வி-] 96.

**சுற்றுடல்**

01. உபயசேகரம் செந்தூரன் [பொஸ்கோ வி.] - 100, 02. யாமினி நடேசன் [சுண்டுக்குளி மகளிர்] - 99, 03. ஜோதீந்திரசர்மா சிவராமசர்மா [ஆனைப்பந்தி மெ. மி. த. க.] - 98, 03. இராசநாயகம் கிஷோக் [பொஸ்கோ வி] - 98.

**ஆங்கிலம்**

புனித பொஸ்கோ வி. யைச் சேர்ந்த சிவராஜா சுதர்மன், சற்குணம் நர்மஜன், ஞானசேகரம் அபிஷேக், அலிங் ஜோன்சன் பசில், கார்த்திகா பாலசுப்பிரமணியம். காயத்திரி தெய்வகுலரட்ணம். கிருஷ்ணன் பிரதீபன். பஞ்சலிங்கம் சுமன். சதாசிவம் செந்தூரன், அன்ரன் அன்றூ நிசாந்தன், பாலகிருஷ்ணன் கோகிலன், மதுரா கணேசலிங்கம், அனபெலா கிருஷ்ந்தினி லூயிஸ், பிரின்சிதிரேஸ் அருமைநாதன், மங்கா பஞ்சரட்ணம், வெறொன்சுஹோ வேதநாயகம், மாதங்கி பத்மநாதன், திருக்குடும்ப கன்னியர் மட. ம. வி யை சேர்ந்த கார்த்திகா . இரத்தினராசா, சங்கீதா சோதிலிங்கம், யூஜினி சிவகணேநாதன், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த யாமினி நடேஸ்வரன், சைஷலஜா உமாசங்கர், பிரவீணு பாலச்சந்திரன்

குணசேகரம் முரளீதரன் (புனித. பத்திரிசியார்), வரதபவன் சதீஸ்குமார் (ஆனைப்பந்தி மெ. மி. த. க). சுபதூவி சுந்தரலிங்கம் (கொக்குவில இந்து ஆ, பா).

யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பா. யைச் சேர்ந்த யாஞேஜினி திருலோகநாதன், கலாமயி கணேசகுலசிங்கம் விதுஜிகா துரைசிங்கம்,

சத்தியசாயினி சோமசேகரம் (யாழ்ப்பாணம் இந்து ஆ. பா). நாகேஸ்வரன் அகிலன் (யாழ். இந்து ஆ. பா) சிந்துஜா சமதர்மபாலன் (துன்னாலை காசிநாதர் வி.) நிஷாந்தினி கிருஷ்ணராசா (துன்னாலை காசிநாதர் வி), சிவானி விக்கினராஜா (நெல்லியடி மெ. மி. த.க ) செல்வரத்தினம் அகிலன் (சுழிபுரம் ஐக்கிய சங்க வி.), சிவராஜா கிரிவக்சன் (பரியோவான்), நாகமூத்து சிவராசா (பரியோவான்), அனுஷா அற்புதராசா (உடுவில் மகளிர்), ஆன்ஜெனிற்ரு அருளினி-அருட்சோதி (தந்தைசெல்வா தொடக்க ப], யசிந்தா இராமச்சந்திரன் [மகாஜனக் கல்லூரி)

### தமிழீழ இளநிலைத் தேர்வு – 1994

**தமிழ்**

01 புவனேந்திரன் ஈழநாதன் [உடுப்பிட்டி அ. மி. க.] - 98 02. சயந்தி குகதாசன் [வேம்படி மகளிர்] - 97, 02. ஜனனி தில்லைநாதன் [வேம்படி மகளிர்) - 97.

**ஆங்கிலம்**

01. விநாயகமூர்த்தி துஷ்யந்தன் ]யாழ். இந்து] -100, 02, அருமைநாயகம் டிவேன் பெனேசர் [பரியோவான்[- 99, 02. மகேஸ்வரன் நிற்குலன் (பரியோவான்) - 99, 02 இரத்தினம் ரஜீவன் [பரியோவான்) - 99, 02. மகேந்திரநாதன் சுபேந்திரன் (பரியோவான்] - 99, 02. கைலநாதன் வாகீஷன் [பரியோவான்] - 99,

**கணிதம்**

01 அரியநாயகம் துஷ்யந்தன் [உடுப்பிட்டி அ. மி. - 100. 02, சிவகுமாரன் கிருஷ்ணகுமார் [யாழ். இந்து] - 99, 02 சிவகலா சிவசுப்பிரமணியம் [மெதடிஸ்த பெண்கள் உ. பா.) - 99.

**விஞ்ஞானம்**

01- விநாயகமூர்த்தி துஷ்யந்தன் [யாழ். இந்து] -97, 01. சூசைநாயகம் மடனிசேவியர் [சம்பத்திரிசியார் கல்லூரி) - 97, 03. அனுஷா சிவபாதசிங்கம் [யாழ். இந்து மகளிர் - 93

**சமூகக்கல்வி**

01. ஜெயரூபா தனபாலசிங்கம் [[வேம்படி மகளிர்) - 100, 02. யேசுதாசன் ஜான்சன் [புனித பத்திரிசியார் - 97. 03. சிவகுமாரன் கிருஷ்ணகுமார் [யாழ். இந்து] -96, 03 குமாரிபுஷ்பா இலங்கைநாதன் [வேம்படி மகளிர்] -96, 03. கணபதிப்பிள்ளை குமணன் [ஹாட்லிக் கல்லூரி] - 96, 03. தர்மராசா சிறீநிவாசகன் [ஹாட்லிக் கல்லூரி] - 96, 03. சிவபாதசுந்தம் ஜெயநாதன் [உடுப்பிட்டி அ. மி] - 96, 03. சிவதி சிவலிங்கராசா [சுண்டுக்குளி மகளிர்] - 96.

### தமிழீழப் பொதுக் கல்வித்தேர்வு – 1994

**கணிதம்**

01 சிவசோதி செந்தூரன் [யாழ். இந்து] - 99, 02. சிவநந்தினி குமரேசன் [வேம்படி மகளிர்] - 98. 02. நவரட்ணம் ரமணன் (யாழ். இந்து] - 98. 04. செல்வரட்ணம் உதயசங்கர் [யாழ் இந்து] - 97.

**விஞ்ஞானம்**

01. சிவராஜா - சுதர்சன் [ஹாட்லி] 94. 02. செல்வரட்ணம்-உதயசங்கர் [யாழ். இந்து] 93, 03. செல்லத்துரை-மயூரன் [பரியோவான்] 92, 04. சுதர்சனு - மகேந்திரன் [வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி] 91.

**ஆங்கிலம்**

01. சங்கீதா - பாலசுப்பிரமணியம் [சுண்டிக்குளி மகளிர் 98, 02. சுதர்தா-நவரட்ணசிங்கம் [வேம்படி மகளிர்]96, 03. ராஜகுமாரசுவாமி நிசாந்தன் [புனித பத்திரியார்] 94.

**சமூகக் கல்வியும் வரலாறும்**

01. சோமசேகரம் - வாகீசன் [யாழ். மத்திய] 89, 02. றெபின்சன்-பேணுட்பிரசாந்தன் [புனிதபத்திரிசியார்] 87 03. இந்திரலிங்கம்-தெய்வேந்திரன் [ஹாட்லி] 86, 03.

(4ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

உன்னிடமிருந்தால் பிறர்க்குக் கொடு; இல்லாதபோது கூச்சப்படாமல் கேள். செல்வம் சேருகின்ற நேரத்தில் உதவ மறுக்காதே; மறுத்தால் அது தீர்ந்து போனதும் உனக்கு உதவ யாருமே இருக்கமாட்டார்கள். இறைக்க இறைக்கத்தான் கேணி சுரக்கும். இல்லையேல் தேங்கிய அளவிலேயே திகைத்துப் போய் நின்று விடும்.

- கண்ணதாசன்

# இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை நெடுங்குளம் யே/61 உற்பத்திக் குழுவின் புனரமைப்புக் கூட்டம் இன்று 28ம் ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எழிலூர் பாலர் பாடசாலை மண்டபத்தில் உற்பத்திக்குழுவின் தலைவர் திரு, த. சாமிநாதன் தலைமையில் இடம்பெறும்.

0 0

(உடுவில்)

மருதனுமடம் தொலைக் கல்வி நிலைய விசேட கற்கை நெறி 1991—93 பயிலுனர் ஆசிரியர்களுக்கு இரண்டு தினங்களுக்கான செயலமர்வு இராமநாதன் கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. 109

# பண்டா — செல்வா ஒப்பந்தத்தை விட மாகாண சபை மேலானது

— ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

இனப் பிரச்னைத் தீர்வுக்கு அரசு தெரிவித்துள்ள பண்டா-செல்வா ஒப்பந்தத்திலும் பார்க்க, எமது மாகாண சபை அமைப்பு மேலானது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிகோதாவில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே, ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவிக்கையில், அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். இருந்தபோதிலும் பேச்சுவார்த்தையின் போது எந்தவிதத் தலையீடும் செய்ய மாட்டோம்.

இதுவரை விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் பற்றி அரசு எம்மிடம் எதுவும் தெரிவிக்கவில்லை என்றார். ம-சி

## ஆர்தர் சி கிளார்க்கிற்கு செய்மதி மூலம் கிடைத்த விஞ்ஞான கலாநிதி பட்டம்

(கொழும்பு)

ரூபவாஹினி கலையரங்கத்தில் இருந்து கொண்டு செய்மதி மூலம் லண்டன் பல்கலைக்கழகம் வழங்கிய கலாநிதி பட்டத்தை பிரபல விஞ்ஞான எழுத்தாளர் ஆர்தர் சி கிளார்க் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வு ரூபவாஹினியில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. தொலைக்காட்சி மூலம் இப்படியான பட்டமளிப்பு வைபவம் நடந்தது இதுவே முதல் தடவை என்றும் தெரிவிக்படுகிறது.

லண்டன் லிவர்பூல் பல்கலைக்கழகமே ஆர்தர் சி கிளார்க்கிற்கு கௌரவ கலாநிதிப்பட்டத்தை வழங்கியுள்ளது.

கலாநிதி ஆர்தர் சி கிளார்க்கின் 2001 நூற்றுண்டில் 'த ஸ்பேஸ் ஒடிசு' என்ற நூலை ஆதாரமாக திரைப்படம் தயாரிக்கப்பட்டது' உலகில் முன்மாதிரியான படைப்பு என்று லிவர்ப்பூல் பல்கலைக்கழகம் கருதியே இந்தக் கௌரவப் பட்டம் வழங்கப் பட்டது. (ம-சி)

## அடையாள அட்டை கிடைக்காதவர் மேன் முறையீடு செய்யலாம்!

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு அந்தந்தப்பகுதி கிராமசேவகர்கள் ஊடாக விண்ணப்பம் செய்து இதுவரை தேசிய அடையாள அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் தேசிய ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அவர்கள் தமது மேன் முறையீட்டைச் செய்யலாமென ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தரிடம் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரிகள் தம்மை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தமது பிறப்பத்தாட்சிப் பத்திரங்களை இணைத்துக்கொள்ள வேண்டும். அறுபது வயதுக்கு மேற்பட்ட ஒருவர் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்யும்போது அவரது பிறப்பத்தாட்சிப் பத்திரம் இல்லாதிருந்தால் அவர் தனது பெயரை உறுதிபடுத்தும் வகையில் தனது பிள்ளையின் பிறப்பத்தாட்சிப் பத்திரத்தை விண்ணப்பத்துடன் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

வறுமைக்கோட்டின் கீழ் நிவாரணம் பெறுவோருக்கு அவர்களின் விண்ணப்பங்கள் விரைவாகப் பரிசீலனை செய்யப்பட்டு தேசிய அடையாள அட்டை விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகள் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுல்செய்யப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். 162-ரி

## நமது நோக்கு

### நோர்வேயும் அப்பாணியில்!

நோர்வே அரசு தனது நாட்டிலுள்ள 300 இலங்கைத் தமிழ் அகதிகளை உடனடியாகத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது.

சொந்த மண்ணை விட்டுப் புலம் பெயர்ந்து போனபோது இங்கிருந்த நிலை என்ன? இங்கு நிலவிய இராணுவக் கொடூரங்களையும், இன ஒழிப்பு நடவடிக்கைகளையும் மக்கள் மறந்தாவிட்டார்கள்?

இனக் கலவரங்களின் போது நடந்தது என்ன?

நேரில் கண்ட வெளிநாட்டு நிருபர்களே செய்திகளை அனுப்ப, அவற்றைப் படித்த ஐரோப்பிய நாடுகள் அகதிகளை ஏற்க முன்வந்தன.

இதனுல் - சர்வதேச மட்டத்தில், இலங்கை அரசின மனித உரிமை மீறல்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

இன்று - மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் உருவாகிய உடன், அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் ஐரோப்பிய நாடுகள் அக்கறை காட்டுகின்றன.

அந்த நாடுகளில் அகதிகளால் ஏற்படும் சுமையை நாம் அறியாமலில்லை.

ஆனுல் - இங்கு நடப்பதென்ன? அமைதித் தீர்வுக்கு முட்டுக்கட்டைகள் போடுபவர்கள் யார்?

அவசரப்படும் ஐரோப்பிய நாடுகள் இவற்றை ஆழமாகச் சிந்தித்தால, மக்கள் இன்று அச்சமின்றி பாதுகாப்பாக வாழும் நிலை உருவாகவில்லை, அந்த நிலை உருவாக இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டும் என்பதை உணரலாம்.

பாதை திறப்பு விவகாரம், மீன்பிடித் தடை அகற்றல் ஆகிய சிறிய விவகாரங்களிலேயே அரசு பல தடைகளைத் தாண்ட வேண்டிய நிலையில் உள்ளது.

நிதி உதவிகள் மூலம் முன்னைய அரசின் வளர்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தால், இனப் பிரச்னை தீரும் என்று உதவும் நாடுகள் எண்ணின.

ஆனுல் - அந்த நிதிஉதவிகள் இராணுவத் தர்பாருக்குத்தான் உதவின என்பதை அந்த நாடுகள் உணர்ந்துள்ளன.

எனவே - அகதிகளைத் திருப்பி அனுப்பமுன், சமாதானத் தீர்வுக்கு அரசைத் தூண்டும் முயற்சியில் மேலும் முனைப்போடு செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்!

## பலதும் பத்தும்

### உச்சரிப்பு!

நாடுகளுக்கிடையே ஆங்கில மொழி உச்சரிப்பு வேறுபாடு அதிகரித்து வருகிறது. இங்கிலாந்துதான் அம்மொழிக்கு 'மூலஸ்தானம்' என்ற நிலை மாறிவிடுமாம்! 'அரசி ஆங்கிலம் (Queen's English) என்ற உயர் வழக்கைப் பின்பற்றுவோர் தொகை அந்த நாட்டிலே 5 வீதம் மட்டும்தான். ஏனையோர். .? 'கொச்சை' தான்!

பிரித்தானியாவில் 56 மில்லியன், அமெரிக்காவில் 250 மில்லியன் ஆங்கிலம் பேசுவோர் இருப்பதால் 'ஒக்ஸ்போர்ட்' தலைமைத்துவம் அமெரிக்க 'ஒஹியோ' விற்கு மாறுகிறது என ''இன்றைய ஆங்கிலம்'' என்ற சஞ்சிகையில் டொம்மக் ஆர்தர் என்பவர் எழுதியுள்ளார்!

வானொலி, தொலைக்காட்சியில் பொதுவான, எல்லோருக்கும் ஏற்ற உச்சரிப்பு முறை வலியுறுத்தப் பட்டுள்ளது!

-மயூரன்

## இராசி பலன்

28-1-1995

சனிக்கிழமை

(தமிழுக்கு தை 14)

துவாதசி முற்பகல் 10-06 வரை: மூலம் முன்னிரவு 7 33 வரை சித்தயோகம் சனிப் பிரதோச விரதம். இராகு காலம் காலை 9-35 முதல் 11-06 வரை: சுபநேரம் மாலை 3-36 முதல் 5-06 வரை.

மேடம்: மனப்போராட்டம், தாழ்ந்தநிலை, குழப்பம்

இடபம்: தொழில் பாதிப்பு, தப்பபிப்பிராயம், வீண் செலவு

மிதுனம்: பெற்றோர் அறிவுரை. காரிய சித்தி, சந்தோஷ மிகுதி

கடகம்; விரோதிகள் மதிப்பு, வாக்கு வசீகரம். புகழ்

சிங்கம்; பயவுணர்வு, சகோதரி பகை, அலைச்சல்

கன்னி: குழப்பமடைதல், அதிகாரிகள் சினம், காரியத் தடை

துலாம்; அதிகாரம், தெய்வீக வழிபாடு. பயண அனுகூலம்

விருச்சிகம்: குறைகேட்டல் மனத்துயர், வெளியார் கோபம்

தனுசு: நினைத்ததை சாதித்தல், கலைஞானம், தியானம்

மகரம்: குதர்க்க வாதம்; பிறர் கண்டனம், பணமுடை

கும்பம்: உள்ளக் களிப்பு. உயர்வான நிலை, சுபகாரியம்

மீனம்; தொழில் உயர்வு, மனைவி பாராட்டு, உல்லாசம்

ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—01—28
சனி இரவு

08-01 தாயகப் பாடல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 கவியரங்கம்- ''எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்''
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

1995—01—29
ஞாயிறு காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகை செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995—01—28
சனி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 மங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் வினுடி வினுப் போட்டி நிகழ்ச்சியில் நாவற்குழி மகா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான இரண்டாம் சுற்றுப் போட்டி
06-00 சிந்தனைக்கு சில வினுடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

## சிங்கப்பூரில் ஏயர்லங்கா விமானம் விபத்துக்குள்ளானது

(கொழும்பு)

சிங்கப்பூரில் எயர்லங்கா விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடும் காற்று, சீரற்ற காலநிலையால் எயர்லங்கா விமானம் ஓடுபாதையை விட்டு விலகிய காரணத்தினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

அதிர்ஷ்டவசமாக விமானத்தில் இருந்த பயணிகள் தப்பித்துக்கொண்டனர். ம-சி

## ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு இரு மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்னை, பின்னர் இரு குழுக்களாக மாறி இரு சாராருக்கும் இடையே ஏற்பட்ட மோதலினுல், பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளதாம்.

11 மாணவர்கள் இத் தாக்குதலில் காயமடைந்தனர் என்றும் கூறப்படுகிறது. ம-சி

## காரைதீவு பகுதியில் இரவிலும் நடமாடலாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காரதீவுப் பகுதியில் மக்கள் இரவு 10 மணிக்குப் பின்னரும் நடமாடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்பு காரைதீவு கிராமத்தில் எவரும் 10 மணிக்குப்பின்பு, நடமாடக் கூடாது என்று இராணுவம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள தாக்குதல் நிறுத்தத்தினுல் இந்தத்தளர்வு ஏற்பட்டுள்ளது என்று அறியப்படுகின்றது. ம-சி

# திருக்கோவிலில் மீன்பிடிக்க அனுமதி

(மட்டக்களப்பு)

திருக்கோவில் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள சாகமம் கடற்பிராந்தியத்தியத்தில் பகலில் மீன்பிடிப்பதற்கு அப்பகுதியில் நிலைகொண்டுள்ள விசேட அதிரடிப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனராம்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததையடுத்து மட்டக்களப்பில் மீன்பிடிக்கான தடைசற்று தளர்த்தப்பட்டதையடுத்தே மேற்படி அனுமதியை அதிரடிப்படையினர் வழங்கினர் என தெரிவிக்கப்படுகிறது.

# கரும்பலகையாக தகரம் பாவிக்கப்படுகிறது!

(திருமலை)

திருகோணமலை பகுதியில் பிரபல பெண்கள் பாடசாலை ஒன்றில் கரும்பலகைக்கு பதிலாக தகரங்கள் பயன்படுத்தப்படுவதாக திருமலைப் பகுதியை சேர்ந்த மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது, ஆண்டு இரண்டு படிக்கும் மாணவர்களின் வகுப்பறைக்கு தடுப்புக்காக போடப்படும் தகர வேலியே இவ்வாறு கரும்பலகையாக பயன்படுத்தப்படுவதாகவும் இது குறித்து சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் தரப்பிலிருந்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டதாகவும் மேலும் அறியப்படுகிறது.

# ஒளிவீச்சு

## ஒளிநாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையான ஒளிவீச்சு டிசம்பர் 1994 ஒளிநாடா வெளிவந்துவிட்டது.

கூமாஞ்சோலை இராணுவ முகாம் மீதான துணிகரத் தாக்குதல்

நிறைவுபெறும் 1994ம் ஆண்டு எனும் அரசியல் பார்வை —

உறவு எனும் குறும்படம் மற்றும் கலைநிகழ்ச்சிகள் என்பவற்றோடு பல வழமையான அம்சங்களைத் தாங்கி இம்மாத ஒளிவீச்சு வெளிவந்துள்ளது.

இவ்ஒளிநாடா இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீதர் திரையரங்கில் இலவசக் காட்சியாகக் காண்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தொகுதி தோறும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய மாவட்டங்களில் இதற்கான திட்டம் குறித்து அடுத்த இரு வாரங்களில் தீர்மானிக்கப்படவிருக்கிறது.

கிராமங்களுக்கு அண்மையில் இவ்வீடுகள் கட்டப்படும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை இதற்கென வீடு ஒன்றை கட்டுவதற்கு 25 ஆயிரம் ரூபாவை கடனாக வழங்கும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். க-இ

# மரண அறிவித்தல்

திருமதி

அப்பாப்பிள்ளை பொன்னுப்பிள்ளை

வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுன்னாகத்தை வதிவிடமாகக் கொண்டவருமாகிய காலம்சென்ற அப்பாப்பிள்ளையின் அன்பு மனைவி பொன்னுப்பிள்ளை 26-01-95 இரவு 12-00 மணிக்கு காலமாகிவிட்டார்.

அன்னார் கனகநாயகி, சரஸ்வதி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, காலம் சென்ற கதிர்காமத்தம்பி (மலாயன் பென்சனியர்), சிவபாலசுந்தரம் (ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், குணராசசிங்கம் (பிரான்ஸ்) — ஜெகதாம்பிகை, கமலாதேவி தில்லைநடராசா, சாரதாதேவி — நாகேஸ்வரன், சத்தியபாமா — சிவராசசிங்கம் (பிரான்ஸ்), சரோஜினிதேவி (ஆசிரியை, தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி, தெல்லிப்பழை), சத்தியா (எழுதுவினைஞர் கச்சேரி, திருகோணமலை), அருந்தவராணி— இலங்கநாயகம் (ஆசிரியர்), ஹரிகரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 27-01-95 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு சுன்னாகம் கொத்தியால் மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தகவல்,

க. சிவபாலசுந்தரம்

''வளர்மதி'',
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

(எ-4755)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Pos Office SriLanka under Licence Number B/16336/B-

அலரிமாளிகை விவகாரம்:

# இரு இராணுவ அதிகாரிகள் விசாரணைக்காக அழைப்பு

[கொழும்பு]

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் காணப்பட்ட வெடிபொருட்கள் சம்பந்தமாக இரு இராணுவ அதிகாரிகள் சந்தேகத்தின்பேரில் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இரண்டு இராணுவ கோப்ரல்கள்மீது விசாரணைகள் நடைபெறுகின்றன. இதேவேளையில் மேலும் சில இராணுவ அதிகாரிகளும் விசாரணைக்கென அழைக்கப்படலாமென பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அலரிமாளிகையைச் சுற்றி இப்போது பாதுகாப்பு மிகவும் கடுமையாக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இ

திறந்த பாடசாலை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்பு சாதனங்கள் மூலம் இவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும்

க. பொ. த. சாதாரணதர) பரீட்சைக்கு சமமானபரீட்சை நடாத்தப்படும். 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இக் கல்வியைபெற்றுக்கொள்ளமுடியும்,

கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன இவ் ஆலோசனையை கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார். க-இ

மட்டு. பொலிஸ்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது,

இதுபோன்று அனைத்து பொலிஸ் நிலையங்களைச் சுற்றி பாதுகாப்பு அரண்களை அமைக்கும் பணியில் பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதே நேரத்தில் பொலிஸ் நிலையங்களின் முன்னால் உள்ள பிரதான வீதிகளும் பொது மக்களின் நடமாட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதற்கான காரணங்களை கூறுவதற்கு பொலிசார் மறுத்துவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. வி-இ

கல்வி மேம்பாட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடராசா- ஜெயகரன் [யாழ்.இந்து] 86;

தமிழ் மொழி

01. சுதர்சனா-மகேந்திரன் [யாழ்ப்பாணக் கல்லூரி] 91, 02. உமா இராசேந்திரம் [வேம்படி மகளிர்[ 90, 02. சுகுணயினி-கந்தையா [வேம்படி மகளிர்] 90, 02 சஞ்சிதா தில்லைநாதன் [வேம்படி மகளிர்] 90, 02காயத்திரி-அசோகன் [வேம்படி மகளிர்] 90, 02.நடேசு-சுபேந்தன் [மானிப்பாய் இந்து] 90.

தமிழ் வளர்ச்சிக் கழகம் வழங்கும் தமிழ்ப் பாடத்துக்கான பரிசுகள் பெறுவோர்

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு

01. சுதர்சனா-மகேந்திரன் [யாழ்ப்பாணக் கல்லூரி] 91 3000/- 02. உமா இராசேந்திரம் [வேம்படி மகளிர்] 90 2500/- 02. சுகுணினி-கந்தையா [வேம்படி மகளிர்] 90 2500/-,
02, சஞ்சிதா - தில்லைநாதன் [வேம்படிமகளிர்] 90 2500/- 02 காயத்திரி-அசோகன் [வேம்படி மகளிர் 90 2500/- 02.நடேசு-சுபேந்தன் [மானிப்பாய் இந்து] 90 2500/-

இளநிலைத் தேர்வு

01. புவனேந்திரன்-ஈழநாதன் [உடுப்பிட்டி அ. மி] 98 3000/- 02. சயந்தி-குகதாசன் [வேம்படிமகளிர்] 97 2500/- 02. ஜனனி-தில்லைநாதன் [வேம்படி மகளிர்] 97 2500/-

முதனிலைத் தேர்வு

01. பிரனீதா-பொன்னம்பலம் [புனித பொஸ்கோ] 99 3000/- 01. ஆன்ஜெனிற்றா அருளினி-அருட்சோதி [தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி 99 3000/- 01. கோபாலகிருஷ்ணன்-சுதர்சன் [யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) 99 3000/- 01. விமலேஸ்வரி ஆதித்தன் [யாழ்இந்து ஆரம்ப பாடசாலை] 99 3000/-

# அரசு ஊழியர்க்கு நன்மைகள் வழங்க முடிவு

(கொழும்பு)

அரசாங்கத் துறையிலுள்ள நான்கு லட்சத்து 50 ஆயிரம் ஊழியர்களுக்கு பல நன்மைகளை ஏற்படுத்திக் கொடுக்க பொதுநிர்வாக பெருந்தோட்டத்துறை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா இணங்கம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துறையில் உள்ளவர்களின் சம்பளக் குறைபாடுகள் குறித்து தாம் உடனடியாகக் கவனத்தில் எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அரசாங்க ஊழியர்களுக்கு புதிய சம்பள முறை ஒன்றும் அறிமுகப்படுத்தப்படும். -இ

5ம் ஆண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

கடந்த ஆண்டு மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அடுத்த மாதம் 15ம் திகதியளவில் தாம் விரும்பும் பிரபல பாடசாலைகளில் சேர்ந்துக்கொள்ள சந்தர்ப்பமளிக்கப்படும் இதற்கான வெட்டுப் புள்ளி பற்றி நேற்று தீர்மானிக்கப்பட்டது

இதேவேளையில் தமிழ் மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் வெட்டுப்புள்ளி பற்றி அடுத்த மாத ஆரம்பத்தில் தீர்மானிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். க-இ

வினாத்தாள்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அரசாங்கம் இந்தப் புகார்களை ஏற்றுக்கொண்டுள்ளது. இதனாலேயே இந்த வருடம் முதல் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் மாற்றம் செய்யவும் வினாத்தாள்களை இலகுவாககவும் அரசு முடிவு செய்துள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். இ

நாடு திரும்பும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றம்பற்றி மேற்குலக நாடுகள் திருப்திகொண்டிருப்பது போல் தெரிகிறது. ஆனால் அதே சமயம் அகதிகளின் நலனில் அக்கறைகொண்டிருக்கும் மனிதாபிமானக்குழுக்கள் பேச்சுவார்த்தை நிச்சயம்வெற்றி பெறும் என்றுதிர்க்கமான உறுதிகள் இன்னும் தோன்றவில்லையென்றுகூறுகின்றன,

பல்வேறுபட்ட போராட்ட இயக்கங்களைச் சேர்ந்த அதனை ஆதரித்த சில அகதிகளுக்கு இலங்கை திரும்பினால் அபாய அச்சமும் இருக்கிறது.

இதைத்தவிரஏற்கனவே நாடு திரும்பிய அகதிகளின் நிலை பற்றி எதுவுமே தெரியவில்லை. சில முகாம்களும் வீடுகளும் அமைக்கப்பட்டதைத் தவிர அகதிகளுக்காக வேறு எந்த நலவாழ்வுத்திட்டமும் செய்யப்படவில்லை.

சுவிற்சலாந்து அரசு இலங்கைத்தமிழ் அகதிகளை கடந்த ஜுலை மாதத்திலிருந்தே சிறு சிறு குழுக்களாக நாட்டுக்கு திருப்பி அனுப்பத் தொடங்கிவிட்டது.

ஏனைய ஐரோப்பிய நாடுகளும் சுவிற்சலாந்தின் இந்த நடவடிக்கையைப் பின்பற்ற விரும்புகின்றன என பி. பி. சி தெரிவித்தது. (இ)

பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெற ஏற்பாடாகியிருந்த தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பரிசளிப்புவிழா தவிர்க்க முடியாத காரணங்களினால் பின்போடப்பட்டுள்ளதாக தமிழீழக்கல்விக்கழகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலுள்ள அலரி மாளிகையில் வெடிப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இராணுவத்திலுள்ள பல தரப்பினரும் விசாரணை செய்யப்பட்டனர்.

ஆனால் இந்தச் சம்பவம் பற்றி நிரூபிப்பதற்கு போதிய சாட்சியங்கள் இல்லாததால் விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் இந்தச் சம்பவத்தின் பின்னர் அலரி மாளிகையின் பாதுகாப்பையும் ஜனாதிபதியின் பாதுகாப்பையும் மறுசீரமைக்க பாதுகாப்பு நிறுவனங்கள் குழு முடிவுசெய்தது அது சம்பந்தமான அறிக்கை ஒன்றையும் அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கை அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிக்கையில் தெரிவிக்கப்படுள்ள பாதுகப்பு மறுசீரமைப்புநடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் ஜனாதிபதி சந்திரிகாவின் கவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது -இ

அரசியல் தீர்வு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ள விடுதலைப் புலிகள் விதித்துள்ள நிபந்தனைகளாகும்!

இந்த நிபந்தனைகளுக்கு இணங்குவதன் மூலம் அரசுக்குக் கிடைக்கும் அரசியல் லாபத்தைவிட இனங்களுக்கிடையே ஏற்படும் சமாதனத்தையே அரசு பெரிதாகக் கருதுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகள் தமது கோரிக்கைகளை அதிகரித்து வருகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள படை முகாம்களை அகற்றுவது பூநகரி முகாமை தூர இடத்துக்கு நகர்த்துவது போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

தமிழ் மக்கள் இன்று சமாதானத்தையே எதிர்பார்த்திருப்பதாக எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது.

விடுதலைப் புலிகள் சமாதனத்துக்காகவே செயல்படுகிறார் என்பதை இந்த நாட்டு மக்களுக்கு உணர்த்தவேண்டும்.

விடுதலைப்புலிகள் சிறு சஞ்சலத்துக்கு இப்போது உட்பட்டிருப்பதைப்போல் தெரிகிறது. இது அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் விதத்திலேயே அமையும் ஏனவும் ஜனாதிபதி சந்திரிகா தமது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். இ